சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.92/2020

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமார் | வயது | 54 |
| த/பெ | ரங்கசாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | பிள்ளையார் கோவில் வீதி, காரமடை | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | விவசாயம் |

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

திம்மண்ணகவுண்டர்புதூரில் உள்ள வீடு எனது அப்பாவின் சுய சம்பாத்திய சொத்து என்றால் சரி தான். அந்த சொத்தை பொறுத்து எனது அப்பா எனது தம்பி லவக்குசா பெயரில் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரி தான். இந்த விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் எனது அப்பா இறந்து பின்னர் தான் தெரிய வந்தது. எனது தம்பியான 2ம் பிரதிவாதி தற்போது வரை அந்த வீட்டில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரி தான். அந்த வீட்டை எனது அப்பா எனது தம்பி பெயருக்கு உயில் எழுதி வைத்ததால் தான் நான் அந்த வீட்டை இந்த வழக்கில் காட்டவில்லை என்றால் சரி தான். இந்த வீட்டை தவிர பிராதில் கூறப்பட்டுள்ள சொத்துகளில் 2ம் பிரதிவாதிக்கும் 1/8 பாகம் உரிமை உள்ளது என்றால் சரி தான்.

(3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

Sd/- G.Gengaraj

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.